# நகர்ப்புற மறு வளர்ச்சி சட்டம் அரசாங்கம் வரைந்து வருகிறது





ஹாங்காங், மார்ச் 9-

மலேசியாவின் முதல் நகர்ப்புற மறுமேம்பாட்டு சட்டத்தை (யு.ஆர்.ஏ) வரையும் இறுதி கட்டத்தில் வீடமைப்பு உள்ளாட்சித் துறை அமைச்சு இருந்து வருகிறது என்று அமைச்சர் ஙா கோர் மிங் கூறுகிறார்.

இந்த சட்ட மசோதாவை அமைச்சு விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவிருக்கிறது என்றார் அவர். கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டி.பி.கே.எல்) மாநில அரசாங்கங்கள் உட்பட சம்பந்தப்பட்ட பலருடன் அமைச்சு பல சந்திப்புகளை நடத்தியுள்ளது என்று அவர் கூறினார்.

நகர மற்றும் கிராம திட்ட இலாகா (பிளான் மலேசியா) மூலம் நாட்டிற்கான நகர்புற மறுவளர்ச்சியின் வழிகாட்டிகளை நாங்கள் தயாரித்து முடித்து விட்டோம். 2023 இல் அமைச்சரவையால் இதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டு விட்டது என்றார் அவர்.

சட்டத்தை வரைய சட்டத்துறை தலைவர் அலுவலகத்தின் வரைபட பிரிவு உட்பட பல்வேறு நிறுவனங்களுடன் அமைச்சு அணுக்கமாக பணியாற்றிவருகிறது என்று அவர் பெர்னாமாவிடமும் தி ஏட்ஜிடமும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தால் சட்டம் நிறைவேற்றப்பட்ட வுடன் மாநகர்களின் தோற்றத்தை மாற்றவும் கோடிக்கணக் கான வெள்ளி மதிப்பிலான மேம்பாடு களை கொண்டு வரவும் ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உருவாகும் என்று ஙா குறிப்பிட்டார்.